188

<u>சுருக்கம்</u>

ட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் ர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் னாளிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்கி வழங்குவதற்கு ரூபாய் ரு கோடி செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (சகி)துறை</u>

அரசாணை (நிலை) எண். 14 — நாள் 4-2-2003

<u>படிக்கப்பட்டது:</u>

சமூக நல ஆணையரின் கடித எண். 36418/சஉதி 1 (4) /2002 நாள் 4-5-2002.

---

ஆணை:

26-4-2002 நாளில் சட்டமன்றப் பேரவையில் சமூக நலத்துறை மானியக் கோரிக்கையின் விவாதத்திற்குபின் அமைச்சர் (சமூக நலம்) அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டபடி கீழ்க்கண்ட அறிவிப்பினை செய்தார்கள்

"புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மையங்களில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்குவதற்கென இந்நிதியாண்டில் ரூ. 1 கோடி செலவினத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்"

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக சமூக நல ஆணையர் அனுப்பியுள்ள அறிக்கையில் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள 38,925 ஊரகப் பள்ளிச் சத்துணவு மையங்களில் 60,15,252 பயனாளிகளும், நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள 2087 நகர்ப்புற பள்ளி மையங்களில் 4,76,410 பயனாளிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர் எனவும், சமூக நல ஆணையர் தம் கட்டுப்பாட்டில் உள்ள 11,138 குழந்தைகள் நல மையங்களில் 3,22,755 பயனாளிகள் உள்ளதாகவும் பயனாளிகளுக்கு தலா ரூ.30 வீதத்தில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க ...3 லட்சம் ஒதுக்கீடு செய்யும்படி பார்வையில் கண்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

3. சமூக நல ஆணையரின் கருத்துருவின்படி எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்க ஒரு பயனாளிக்கு ரூ.30/– அனுமதித்தால் ரூ.1 கோடி செலவில் 3,33,326 பயனாளிகளுக்கு மட்டுமே எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்க இயலும்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின்னர் முதற் கட்டமாக புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மையங்களில் உள்ள பயனாளிகளுக்கு தலா ரூபாய் 30/– செலவினத்தில் ஒரு எவர் சில்வர் தட்டு மற்றும் ஒரு எவர் சில்வர் டம்ளர் வீதம் 3,33,326 பயனாளிகளுக்கு மொத்தம் ஒரு கோடி ரூபாய் செலவில் வாங்கி வழங்க ஒப்புதல் அளிக்கப்படுகிறது. பயனாளிகளின் விகிதாச்சார அடிப்படையில் ரூபாய் ஒரு கோடியை துறைத் தலைவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பிரித்து அளிக்கப்படுகிறது.

| வரிசை எண் | துறைத்தலைவர் | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | ஊரக வளர்ச்சி இயக்குநர் | 2,94,160 | (லட்சத்தில்) 88.25 |
| 2 | நகராட்சி நிர்வாக ஆணையர் | 23,000 | 6.90 |
| 3 | திட்ட ஒருங்கிணைப்பாளர் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்–3 | 16,166 | 4.85 |
| | மொத்தம் | 3,33,326 | 100.00 |

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்த புள்ளி விதிகள் 2000–ன்படி எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்கி வழங்கிட ஊரகப்பள்ளி மையங்களுக்கு, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கும் அங்கன்வாடி/ ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம்–III அவர்களுக்கும் சென்னையைத்தவிர இதர மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதி மையங்களுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தியது குறித்து பயனீட்டுச்சான்றினை அரசுக்கு உடன் அனுப்பி வைத்திடுமாறு துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண் 43–ல் புதிதாக துவக்கப்படவுள்ள/கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

/ கீழ்க்கண்ட

டம்ளர் வழங்குதல் 24 பொருட்களும் வழங்கலும்" (த.தொ.கு.2236 02 102 KR 2400)

7.திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டப் பணிகள்–3 மேற்காணும் புதிய கணக்கு தலைப்பிற்கு மதிப்பீடு, வரவமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

8. மேலே பத்தி 5 ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் "புதிய பணிப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund ) மேற்கொள்ளப்படும் இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது1 ) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான முன்பணம் பெறுவதற்கு உரிய படிவத்தில் தேவையான விண்ணப்பங்களை இவ்வாணையின் நகலுடன் நேரடியாக நிதி ( வரவு செலவு பொ.1) அனுப்பும்படி துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இச் செலவினத்தை இறுதி துணை மானியக் கோரிக்கை 2002–2003–ல் சேர்த்திட ஏதுவாக உரிய வரவு செலவுத்திட்ட கருத்துருக்களை உரிய தருணத்தில் தவறாமல் அரசின் நிதித்துறைக்கு அனுப்பி வைத்திடுமாறும் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9.இவ்வாணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது இசைவினை அ.சா.கு எண் 44.(DS(TK) 03, நாள் 31–1–2003 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1205 மூலம் அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.கே.கரியாலி,
அரசு செயலர்.

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை 5.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை 15
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5
திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்–3, சென்னை 20
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
கணக்காயர் மற்றும் கருவூல இயக்கக ஆணையர், சென்னை 35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) தலைமைச் செயலகம்,
...க்கு/டக்கு, சென்னை 5/9/35/79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
தனி சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
பெருநகர மாநகராட்சி, சென்னை 3.